**ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியர்களுக்கான முக்கிய எச்சரிக்கை அறிவிப்பு**

**பொருள்: அவசரச் சான்றிதழ் (Emergency Certificate) / வெளியேறும் அனுமதி (Exit Permit) / அமீரக அடையாள அட்டை (Emirates ID) / விசா முறைப்படுத்துதல் உள்ளிட்ட சேவைகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி, அங்கீகரிக்கப்படாத முகவர்கள் / தனிநபர்கள் மேற்கொள்ளும் மோசடி நடவடிக்கைகள் – எச்சரிக்கை – தொடர்பாக.**

1. துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் (Consulate General of India) மற்றும் வடக்கு அமீரகத்திற்கான இந்தியத் துணைத் தூதரக நிர்வாகத்தின் கவனத்திற்கு ஒரு முக்கியமான தகவல் தெரியவந்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் இந்தியர்கள், குறிப்பாக ப்ளூ காலர் தொழிலாளர்கள் (Blue–collar workers), விசா முறைப்படுத்துதல், அவசரச் சான்றிதழ் (Emergency Certificate) அல்லது 'வெள்ளை கடவுச்சீட்டு' (White Passport) பெற்றுத் தருதல், அமீரகத்திலிருந்து வெளியேறுவதற்கான 'அவுட்பாஸ்' (Outpass) அல்லது வெளியேறும் அனுமதி (Exit Permit) பெற்றுத் தருதல், அமீரக அடையாள அட்டை (Emirates ID) பெற்றுத் தருதல் மற்றும் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்தல் போன்ற சேவைகளைச் செய்து தருவதாகப் பொய்யான வாக்குறுதிகளை அளிக்கும் அங்கீகரிக்கப்படாத தனிநபர்கள் மற்றும் முகவர்களின் மோசடிகளில் சிக்கி வருகின்றனர்.
2. மேற்கண்ட மோசடி நடவடிக்கைகளின்போது, பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்குத் தெரியாமலும், அவர்களின் உரிய சம்மதம் இன்றியும், அவர்களது முகம் மற்றும் கைரேகை உள்ளிட்ட உயிர்மப் பதிவுத் தகவல்கள் (Biometric Data) ஸ்கேன் செய்யப்படுகின்றன. மேலும், அவர்களது பெயரில் நிதிப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளுதல், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், கடன்கள் அல்லது கடன் அட்டைகளை (Credit Cards) பெறுதல் போன்ற மோசடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக, பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்குத் தெரியாத நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் கடன்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன், அபராதங்கள், பயணத் தடைகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில்

சிறைத்தண்டனை உள்ளிட்ட கடுமையான சட்டரீதியான விளைவுகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

3. எனவே, தங்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளில் சிக்காமல் இருப்பதற்கும், ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் அனைத்து இந்தியர்களும் பின்வரும் அறிவுறுத்தல்களைத் தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

அ) எந்தவொரு சூழ்நிலையிலும், தங்களது கடவுச்சீட்டு (Passport), அமீரக அடையாள அட்டை (Emirates ID), உயிர்மப் பதிவுத் தகவல்கள் (Biometric Data) – அதாவது கண் / முக ஸ்கேன் அல்லது கைரேகை – மற்றும் தனிப்பட்ட அல்லது நிதி சார்ந்த தகவல்களை அங்கீகரிக்கப்படாத எந்தவொரு தனிநபர் அல்லது முகவருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

ஆ) வெளியேறும் அனுமதி (Outpass / Exit Permit), அமீரக அடையாள அட்டை (Emirates ID) அல்லது விசா முறைப்படுத்துதல் தொடர்பான சேவைகளுக்காக உயிர்மப் பதிவுத் தகவல்கள் (Biometric Data) – கண் / முக ஸ்கேன் அல்லது கைரேகை – வழங்க வேண்டியிருந்தால், அவை ஐக்கிய அரபு அமீரக அரசால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மையங்கள் அல்லது அலுவலகங்களில் மட்டுமே வழங்கப்பட வேண்டும். அமீரக அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் எனக் கூறிக்கொள்ளும் தனிநபர்கள், முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள் மூலம் இதுபோன்ற உயிர்மப் பதிவுத் தகவல்களை வழங்கக் கூடாது.

இ) துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் (Consulate General of India) மற்றும் அபுதாபியில் உள்ள இந்தியத் தூதரகம் (Embassy of India), கடவுச்சீட்டு அல்லது அவசரச் சான்றிதழ் வழங்குவதற்காக விண்ணப்பதாரர்களிடமிருந்து கைரேகை ஸ்கேன் அல்லது முகம் / கண் ஸ்கேன் உள்ளிட்ட உயிர்மப் பதிவுத் தகவல்களைக் கோருவதில்லை.

எனவே, இந்தியத் தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தின் பெயரைப் பயன்படுத்தி இதுபோன்ற உயிர்மப் பதிவுத் தகவல்களைக் கோரும் எந்தவொரு

நபரும் அல்லது முகவரும் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும். அவர்களுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.

ஈ) அங்கீகரிக்கப்படாத தனிநபர்கள் அல்லது முகவர்கள் உயிர்மப் பதிவுத் தகவல்கள் அல்லது அமீரக அடையாள அட்டை தொடர்பான தகவல்களைக் கோரினால், உடனடியாக 'பிரவாசி பாரதிய சகாயதா கேந்திரா' (Pravasi Bharatiya Sahayta Kendra – PBSK)–வைத் தொடர்புகொண்டு புகார் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தொடர்பு விவரங்கள்:

- கட்டணமில்லா தொலைபேசி எண்: 80046342
- வாட்ஸ்அப் / குறுஞ்செய்தி (SMS): 00971543090571
- மின்னஞ்சல்: pbsk.dubai@mea.gov.in

4) மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் அல்லது அங்கு வருகை தரும் அனைத்து இந்தியக் குடிமக்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், மேற்கண்ட சேவைகளை வழங்குவதாகக் கூறும் எந்தவொரு தனிநபர் அல்லது முகமையின் விவரங்களையும் உரிய முறையில் சரிபார்த்த பின்னரே அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், சந்தேகத்திற்கிடமான அல்லது மோசடி நடவடிக்கைகள் தொடர்பான எந்தவொரு தகவலும் கிடைத்தால், அதனை உடனடியாக துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கும் அல்லது சம்பந்தப்பட்ட ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகளுக்கும் புகார் அளிக்குமாறு துபாயிலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் கேட்டுக்கொள்கிறது.

31 ஆகஸ்ட் 2026
துபாய்